Thiru K. S. KOTHANDARAMIAH: Sir, granite stones of various sizes and colours are available in Dharamapuri in various parts. Though we are just now investigating, the merchants from neighbouring areas have been exploiting the stones in the last 50 years and more and they have been making plenty of money. May I know from the Hon. Minister for Electricity and Industries when the investigation will be over and when the Government would start the factory in Dharamapuri district?

The Hon. Thiru S. J. SADIQ PASHA: As I have already said that so far as Dharamapuri and Salem districts are concerned, the survey is over, while so far as South Arcot is concerned, it is also over; in the North Arcot district, the survey is pending. After completion of survey in all districts, the Director of Industries will submit a report and only on that report Government will come to any conclusion.

Construction of College buildings by Housing Board

* 442 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(*a*) whether the Housing Board has offered assistance to private colleges for putting up buildings; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, கல்விக்காகப் பெரும் தொகை ஒதுக்கப்படுகிறது. கல்லூரிக்கு ரெக்கக்னிஷன் கிடைத்த பிறகு, பல கல்லூரிகளுடைய கட்டடங்கள் நல்ல விதத்தில் இல்லாத காரணத்தினால் வகுப்புகளை ஒழுங்காக நடத்த முடியாமலிருக்கிறது. ஆகவே, கல்வித் தரமும் குறைவாக இருக்கிறது. ஆகவே, இவ்விதமாக தனியார் கல்லூரிகளில் கட்டடம் சரியாக இல்லாத கல்லூரிகளுக்காவது இந்தத் தொகையைக் கொடுத்து, அதற்கு வேண்டிய செக்யூரிட்டியையும் வாங்கி, இன்ஸ்டால்மென்ட் பேசிஸிலாவது இந்தத் தொகையைத் திரும்பப் பெற உரிய திட்டங்களை அரசு வகுக்குமா என அறிய விரும்புகிறேன்.

1975 மார்ச் 24]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், வீடுகள் கட்டிக் கொடுக்கவே நிதி ஒதுக்கீடு பற்றாக்குறையாக இருக்கிறது. ஒரு கல்லூரிக்கு கட்டடம் கட்ட ரூ. 5 இலட்சம், ரூ. 6 இலட்சம் ஆகிறது. தவணை முறையில் ரூ. 50,000 என்ற வகையில் பெற்றுக் கொள்ளலாமென்றால்கூட, ரூ. 5 இலட்சம் என்ற வகையில் கொடுக்க வேண்டி வந்தால், ரூ. 10,000-ல் 40, 50 பேர்களுக்கு வீடுகள் கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் தவிர்க்கப்படும். ஆகவே, மக்களுடைய தேவைகளை அதிகமாகக் கவனிக்கக்கூடிய தன்மையில் தற்பொழுது வீட்டு வசதி வாரியம் செயல்பட்டு வருகிறது.

Medical Representatives

* 443 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether the State Government have represented to the Centre on the question of declaring medical representatives in the State as 'Workmen' under the Industrial Disputes Act; and

(b) if so, whether any reply has been received from the Centre?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) மருத்துவப் பிரதிநிதிகளையும் 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் கொண்டுவர அச்சட்டத்தை திருத்தம் செய்ய வேண்டுமென்று, தமிழ்நாடு மருத்துவப் பிரதிநிதிகள் சங்கத்திடமிருந்து வந்துள்ள ஒரு மனுவை, 1970-ம் ஆண்டு அக்டோபரில் இவ்வரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்து அனுப்பியுள்ளது. எவ்வித பதிலும் மத்திய அரசிடமிருந்து வரவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், 1970-ம் வருஷத்திலே இந்தச் சர்க்கார் எழுதிற்று. ஆனால், இதுவரையிலும் பதில் வரவில்லை என்பதால், மறுபடியும் அது பற்றி அகில இந்தியத் தொழில் மந்திரிகள் மாநாட்டிலே வற்புறுத்த சர்க்கார் முயற்சி செய்யுமா?